முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.11.03.2026

O.S. No.111/2024

பி.வா,சா-2 முருகன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் 2 ம் பிரதிவாதிக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. வாதிகள் தாக்கல் செய்த வாரிசு உரிமை சான்றிதழ்கான மனுவினை நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரி. அந்த மனுவினை விசாரித்தவர் வட்டாட்சியர் ஆவார். வட்டாட்சியர் விசாரித்து எழுத்து பூர்வ அறிக்கையினை தாக்கல் செய்ததற்கு ஆவணம் உள்ளதா என்றால் தற்போது கோப்பில் இல்லை.வாதிகள் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள். எதன் அடிப்படையில் 1ம் வாதியின் வாரிசு சான்றிதழ் மனுவை நிராகரித்தோம் என்றால் 1ம் வாதி இரண்டாம் நிலை வாரிசு என்பதால் நிராகரித்தோம். இறந்து போன லியோனின் சகோதரியின் மகள் 1ம் வாதி ஆவார். நேரடி வாரிசு இல்லை என்பதால் நிராகரித்தோம். 2 முதல் 4 வாதிகள் இறந்து போன லியோனின் சகோதர சகோதரிகள் ஆவார்கள். அவர்கள் 2 ம் நிலை வாரிசுதாரர்கள்.

எனது எதிருரை மற்றும் நிருபண வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 முதல் 4 வாதிகளுக்கு இறந்து போன லியோனின் 2ம் நிலை வாரிசுதாரர்கள் என்று வாரிசு சான்றிதழ் அளிக்க ஆட்சேபனை இல்லை என்றால் சரி.

(குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)